museum of modern
and contemporary art
sri lanka

## Quarterly Newsletter #6 – January 2024

2024 ஆம் ஆண்டு MMCA இலங்கை செயற்பட்டு ஐந்தாவது ஆண்டாகிறது. நாட்டின் முதல் நவீன மற்றும் சமகால கலை அருங்காட்சியகத்தை நிறுவுவதற்கான எங்கள் பயணத்தில் எங்களுக்கு உதவியதற்காக, அருகிலுள்ள மற்றும் தொலைவிலுள்ள எங்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்க விரும்புகிறோம். பயணத்தின் அடுத்த கட்டத்திற்குள் நுழைவதற்கான பல அற்புதமான திட்டங்கள் உள்ளன. மிக முக்கியமாக, எங்கள் கண்காட்சிகள் மற்றும் பொது நிகழ்ச்சிகள் அனைத்தும் அனைவருக்கும் இலவசம்!

முதலாவது கட்டடக்கலை சார்ந்த எங்களின் கண்காட்சியின் தொடக்கத்துடன் 2024க்குள் செல்கிறோம். தயாரிப்பிலுள்ள ஒரு அருங்காட்சியகம் என்ற வகையில்இ நாட்டின் நவீன மற்றும் சமகால வரலாற்றில் அது முக்கியப் பங்கைக் கொண்டுள்ளதால், எங்கள் கண்காட்சி நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் கட்டடக்கலையை கவனத்தில் கொள்ள ஆர்வமாக இருந்தோம். ஷமினி பெரேரா மற்றும் ரிசெல் மாசெலின் ஆகியோரால் தினால் சஜீவ மற்றும் நிமாயா ஹாரிஸ் ஆகியோரின் உதவியுடன் எடுத்தாளுகை செய்யப்பட்ட ‘88 ஏக்கர்கள்: மினெட் டி சில்வாவின் வடபுழுவ வீட்டுத் திட்டம்’ 30 நவம்பர் 2023 அன்று திறக்கப்பட்டது.

நாங்கள் இதுவரை கண்காட்சிக்கு 4,500 பார்வையாளர்களை ஈர்த்துள்ளோம், மேலும் நாடு முழுவதுமுள்ள பாடசாலைகள் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களிலிருந்து மேலும் பல மாணவர்களை வரவேற்கக் காத்திருக்கிறோம். நீங்கள் இலங்கையில் இருந்தால் வந்து பாருங்கள்!

Registered Address:
117 Sir Chittampalam A. Gardiner Mawatha
Colombo 02
Sri Lanka

info@mmca-srilanka.org
www.mmca-srilanka.org

கொழும்பு 3, கிறெஸ்கட் பொலவாட்டின் தரைத்தளத்தில் அமைந்துள்ள ஆஆஊயு இலங்கையில் 7 ஜூலை 2024 வரை '88 ஏக்கர்கள்' பொதுமக்களுக்குத் திறந்திருக்கும்.

எங்களது ஆரம்பத்திலிருந்து, பொது நிகழ்ச்சிகள் எங்கள் செயல்பாடுகளில் ஒரு முக்கிய பங்கைக் கொண்டிருக்கின்றன. அவை பார்வையாளர்களுக்கு கண்காட்சிகளில் ஈடுபட அதிகளவான வழிவகைகளை வழங்குகின்றன. '88 ஏக்கர்கள்' உடன் இதுவரை வழங்கப்பட்ட எங்களது பொது நிகழ்ச்சிகளில் 800க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் இணைந்துள்ளனர் என்பதை அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இருஷி தென்னகோன் (பி. 1989), சுமேத கெலேகம (பி. 1988), மற்றும் சுமுது அதுகோரல (பி. 1980) ஆகியோரின் தலைமையிலான கலைஞர்களின் சுற்றுப்பயணங்கள் மற்றும் அவர்களது கட்டடக் கலைஞர் மினெட் டி சில்வாவின் (1918–1998) வட்டப்புலுவ வீடமைப்புத் திட்டம் பற்றி '88 ஏக்கர்கள்' இல் தற்போது பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும் 'is this an architectural documentary?' (2023) எனும் திரைப்படம் போன்றன இந் நிகழ்ச்சிகளின் சிறப்பம்சமாகும்.

எங்கள் பொது நிகழ்ச்சிகள் பற்றிய கூடுதல் தகவலுக்கு, எங்கள் இணையதளம் அல்லது மேலே இணைக்கப்பட்டுள்ள பேஸ்புக் இல் மற்றும் இன்ஸ்டாக்ராமில் பக்கங்களைப் பார்வையிடவும்.

இலங்கையின் கண்டியிலுள்ள வடபுலுவ வீட்டுத் திட்டம் (1958) பற்றிய முன்னர் வெளியிடப்படாத காப்பகப் புகைப்படங்கள் மற்றும் ஆவணங்களுடன் 'ஏக்கர்கள்' ஆராய்ச்சியை ஒன்றிணைக்கும் எங்கள் முதல் வெளியீட்டான 'Second Volume' க்காக காத்திருங்கள். பெங்களூரைச் சேர்ந்த நியா தண்டபானி வடிவமைத்து MMCA இலங்கையால் வெளியிடப்பட்ட 'Second Volume' அதிகாரப்பூர்வமாக 1 பெப்ரவரி 2024 அன்று முன்கூட்டிய ஒர்டருக்குக் கிடைக்கும். அதைத் தொடர்ந்து பிப்ரவரி 10

அன்று கொழும்பு 3, கிறெஸ்கட் பொலவாட்டின் தரைத்தளத்தில் அமைந்துள்ள MMCA இலங்கையில் வெளியிடப்படும். அனைவரும் வருக!

டிசம்பர் 8–12 வரை கோலாலம்பூர் மற்றும் சிங்கப்பூருக்குச் சென்ற MMCA இலங்கையின் ஸ்தாபகப் புரவலர்களுக்கான சர்வதேச கலைச் சுற்றுப்பயணத்துடன் 2023ஐ நிறைவு செய்தோம். இந்த பயணத்தில் இல்ஹாம் கேலரி, அலியா மற்றும் ஃபாரூக் கான் சேகரிப்பு, தேசிய கலைக்கூடம் மலேசியா, தேசிய கேலரி சிங்கப்பூர், சிங்கப்பூரிலுள்ள பாரம்பரிய பாதுகாப்பு மையம் மற்றும் சிங்கப்பூர் கலை அருங்காட்சியகம் (SAM) ஆகியவை அடங்கும்.

வீட்டிற்கு அருகில், MMCA Afterschool இன் சிறப்பு கிறிஸ்துமஸ் பதிப்பை 18–21 டிசம்பர் 2023 வரை 6–10 வயது குழந்தைகளுக்காக நடத்தினோம். இந்த அமர்வுகளில் ‘88 ஏக்கர்கள்: மினெட் டி சில்வாவின் வடபுழுவ வீட்டுத் திட்டம்’ தொடர்பான புதிய செயற்பாடுகள், கலைஃபொருள் தயாரித்தல், வரைதல், விளையாட்டுகள் மற்றும் கைவினைப்பொருட்கள் ஆகியவை குழந்தைகளைத் தங்கள் சொந்த கிறிஸ்துமஸ் கிராமத்தை உருவாக்க வழிவகுத்தன.